**OS No.493/2018**

**PW–1 –ரஜேந்திரன்**

**த/பெ.**

**நாள். 07.04.2026**

**<u>வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் 48–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை .</u>**

1.நான் தாக்கல் செய்திருக்கும் பிராதில் இருக்கும் ஐட்டம் ஒன்னு சொத்து விவரமானது ஒரு அடையாளம் காணப்பட முடியாத சொத்து விவரம் என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்தால் அந்த சொத்துக்கு எந்த விதமான தீர்ப்பும் நிறைவேற்ற முடியாது என்று சொன்னால் சரி அல்ல. ஐட்டம் ஒன்று சொத்தின் விஸ்தீரணம் குறிப்பிட்டு சொல்ல முடியாது ஆனால் ஆக மொத்தம் 3 ஏக்கர் 70 சென்ட். அதாவது 15.10 ஏக்கர் மொத்த பூமியில் உன் மூன்றில் ஒரு பங்கு சொத்து தான் 3 ஏக்கர் 70 சென்ட் என்று சொன்னால் இருக்கலாம்.நான் போட்டிருக்கும் தாவாசத்தின் விவரமானது தவறானது என்று சொன்னால் சரியல்ல.

2. அங்காத்தாளுக்கு கிரைய அடிப்படையில் பார்த்தியப்பட்ட ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஐட்டம் ஒன்னு சொத்தில் புஞ்சை ஏக்கர் 15.10 என்று சொல்லி இருக்கும் விவரம் தவறானது என்றால் சரியல்ல. ஐட்டம்–1 பிரித்துக் காட்டப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2007 ஆம் ஆண்டு நாச்சிமுத்துக்கு ஏற்பட்ட கிரையா ஆவணத்தின் அடிப்படையில் தான் நான் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் ஆமாம்.

3.**வா.சா.ஆ–1** ஆவணத்தில் சொத்தன் விஸ்தீரணம் எல்லாம் 11.10 ஏக்கர் என்று குறிப்பிட்டு இருந்த போதிலும் என்னுடைய பிராதில் 15.10 என்று சொல்லப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. அப்பு குட்டி எனக்கு தெரியும் 2002 ஆம் ஆண்டிலிருந்து தெரியும். அப்புகுட்டி **வா.சா.ஆ–1** ஆவணத்தில் ஒரு

சாட்சியாக இருக்கிறார் என்று சொன்னால் சரிதான். 2002 ஆம் ஆண்டிலேயே நீதிமன்றத்தில் வழக்கு இருக்கும் விவரம் அப்புகுட்டிக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான்.

4. தாவா சொத்தை பொருத்து 2002 ஆம் ஆண்டில் கிரைய உடன்படிக்கை ஆவணம் போட்டு இருக்கிறேன். அந்தக் கிரைய உடன்படிக்கையை இந்த வழக்கில் ஆவண படுத்தவில்லை என்று சொன்னால் சரிதான். காட்டப்படும் ஆவணம் கிரைய உடன்படிக்கை ஆவணம் என்று சொன்னால் சரிதான். அது **பி.வா.சா.ஆ–1** ஒன்றாக குறியீடு செய்யப்பட்டுளளது.

5. நாச்சிமுத்து எந்த விதமான உரிமை மூலமும் இல்லாத நிலையில் தான் இந்த கிரைய உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. 2002 ஆம் ஆண்டில் கிடைய உடன்படிக்கை ஏற்படுத்தியிருந்த போதிலும் நாச்சிமுத்துக்கு 2007 ஆம் ஆண்டு தான் நீதிமன்றம் உரிமை மூலம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. என் உரிமை மூலமும் இல்லாத நபரிடமிருந்து 2002 ஆம் ஆண்டு நான் ஏற்படுத்தியிருக்கும் கிரைய உடன்படிக்கையானது அல்ல என்று சொன்னால் சரி அல்ல. அதன் அடிப்படையில் பிரதிவாதிகள் மீது எனக்கு வழக்கு தாக்கல் செய்ய எந்த அருகதையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

6.நான் 48 ஆம் பிரதிவாதியான ரங்கசாமிக்கு எந்த வருடத்தில் ஆவணம் பாத்தியப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. 05.03.2007 தேதி அன்றுதான் ரங்கசாமிக்கு மூலமே ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் தெரியாது. ரங்கசாமி சைட்டுக்களாக பிரித்து தான் கிரயம் செய்திருக்கிறார் என்று சொன்னால் இருக்கலாம். ஏற்கனவே லேஅவுட் களாக பிரிக்கப்பட்ட சைட்டுகளை தான் 48–வது பிரதிவாதி வாங்கி இருக்கிறார் என்று சொன்னால் எனக்கு தெரியாது.

7.ஏற்கனவே 1999 ஆம் ஆண்டிலேயேமுறைப்படி சைட்டுகளாக பிரித்து விற்பனை செய்யப்பட்ட பூமியை தான் பிரதிவாதி வாங்கி இருக்கிறார் என்ற போதிலும் நான் பிரதிவாதியின் மீது எந்தவிதமான வழக்கும் தொடர முடியாது என்று சொன்னால் சரி அல்ல.

8. ஏற்கனவே தாவா சொத்து சைட்டுகளாக பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டிருந்தது தெரிந்திருந்தும் பிரதிவாதிகளை மிரட்டி பணம் பறிக்க வேண்டும் என்ற மோசடியான எண்ணத்துடன் இந்த வழக்கு தொடர்ந்து இருப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்று சொன்னால் சரி அல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.பிவாசாஆ–1 ஆவணம் முதல் பிரதிவாதியுடன் சேர்ந்து வழக்குக்காக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல.

9. 2007 ஆம் ஆண்டு 1–ம் பிரதிவாதிகளுக்கு எதிராக ஏற்படுத்தப்பட்ட தீர்ப்பானது ஒரு தலைப்பட்சமான தீர்ப்பு என்று சொன்னால் சரிதான். நாச்சிமுத்து ஏற்படுத்திய கிரைய மோசடியாக கிரைய உடன்படிக்கை உருவாக்கி இருக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல அதன் அடிப்படையில் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.பிவாசாஆ–1 ஆவணத்தைப் பொறுத்துதான் நான் 2011ல் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கிலும் அங்காத்தாளின் வாரிசுதாரர்களை சேர்க்காமல் ஒருதலைபட்சமான தீர்ப்பு வாங்கி இருக்கிறேன் என்றால் சரிதான்.

10. இந்த வழக்கில் தகப்பனார்களாக காட்டப்பட்டு இருக்கும் 58 பிரதிவாதிகளும் 2011 ஆம் ஆண்டு வழக்கில் தரப்பினர்களாக இருக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் வில்லங்க சான்றிதழ் எதையும் ஆவண படுத்தவில்லை என்று சொன்னால் சரிதான். தாவாசொத்தில் இருக்கும் அனைத்து வில்லங்கங்களும் எனக்கு 2002 ஆம் ஆண்டு தேர்ந்தெடுத்தது

என்று சொன்னால் சரிதான். 2002 ஆம் ஆண்டு விவரங்கள் அனைத்தும் தெரிந்திருந்தும் 14 ஆண்டுகள் காலதாமதமாக நான் தாக்கல் செய்திருக்கும் இந்த வழக்கானது கால வரைமுறை சட்டத்தின் படி பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் சரி அல்ல.

11. அங்காத்தாளின் வாரிசுகள் உரிமை இருப்பவர்கள் யாரையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அங்காத்தாளுடன் சேர்ந்து கிரயம் ஆகிய பழனிசாமி என்ற நபரையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தைப் பொருத்தம் மூன்றில் ஒரு பங்காக பிரித்து அதனை அர்த்தம் பெருத்த எனக்கு ஒதுக்க வேண்டும் என்று நான் எந்த பரிகாரமும் கேட்காததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

12.**பி.வா.சா.ஆ–1** ஆவணத்தில் 5–வது பிரதிவாதியான கிரையத்தை வாங்கி இருக்கிறார் என்று குறிப்பிட்டு சொல்லி இருக்கிறேன் என்றால் சரிதான். 11.05.2007 தேதியன்று பிரதிவாதிகள் இடமிருந்து ஒரு பொது அதிகார பத்திரம் பெற்றிருந்தார் என்றால் சரிதான். **வா.சா.ஆ–39** ஏற்படுத்திய பின்பு தான் **பி.வா.சா.ஆ–1** ஒன்று ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால் சரிதான். 48–பிரதிவாதி தரப்பில் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

Dr.V.Sree Vidya,
Digitally signed by Dr.V.Sree Vidya,
Date: 2026.04.07 13:16:42 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.